பாடல்கள் நோன்புக் காலத்தைக் கணித்துக் காட்டியுள்ளன. பாவைப்பாட்டு என்பது ஒரு பொழுது போக்குப்பாடல் அன்று. அக்காலத்து வாழ்வியல் நடைமுறைகளைப் பிற்காலத்தவரும் அறியும் வண்ணம் வாய்மொழியாகச் செய்யப்பட்ட இலக்கிய ஆவணம். காலத்தின் தேவை கருதி இது எழுந்தது. ஆண்டாளின் திருப்பாவையும் மாணிக்கவாசகரின் திருவெம்பாவையும் ஓராண்டு கால வழிபாட்டு நடைமுறைகளை மார்கழி மாதத்தில் மக்கள் மனங்கொள்ள வேண்டிப் பாடப்பட்டவை. அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் வழிபாட்டுப் பயிற்சி பெண்களால் செய்யப்படவேண்டும் என்பதை உணர்த்துபவை. இன்றுவரை மார்கழி மாதம் முழுவதும் திருப்பாவைப் பாடல்கள் வைணவக் கோயில்களிலே ஓதப்படுகின்றன. தாய்மை உணர்வுடன் இறைவழிபாட்டை எல்லோரும் உணர்ந்து கொள்ள வேண்டி மார்கழி நோன்பு மக்களால் சிறப்பாகப் பெண்களால் கடைப்பிடிக்கப்படுகின்றது. கால ஓட்டத்தைக் கருத்தில் கொண்டு மனித வாழ்வியலைச் சீரமைக்க மார்கழி நோன்பு வழிபாட்டு நடைமுறையாயிற்று. திருப்பாவையும் திருவெம்பாவையும் ஊரெங்கும் ஒலிக்கத் தொடங்கிற்று.

**– நன்றி –**
**நல்லைக்குமரன் மலர்**

## ஈழத்துச் சிதம்பரத்தில் ஆனந்த தாண்டவம்

“கோயில் என்ற தனிச் சிறப்புடன் திகழும் தில்லைச் சிதம்பரத்தில் அல்லும் பகலும் அநவரதமும் ஆடிடும் கூத்தப் பெருமானின் திருவருட் குறிப்பின்படி அத்திருத்தலத்திற்கு அண்மையிலிருந்து கொண்டுவரப்பெற்ற சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப் பெற்றுள்ளமை; தில்லைப் பதியிலே அழகான சோமஸ்கந்த மூர்த்தி வார்க்கப்பட்டு எடுத்து வரப்பெற்றமை; – கூத்தப்பிரானுக்குரிய அபிஷேக ஆராதனைகள், தில்லைச் சிதம்பரத்தைப் பின்பற்றி நிகழ்த்தப்பெறுகின்றமை தில்லைக்கு வந்து என்னைத் தரிசிக்க முடியவில்லையே எனக் கவலைப்படவேண்டாம். காரைநகர்த் திண்ணபுரத்துச் சிவாலயத்தில் என்னைத் தரிசிக்கலாம்” எனச் சில அடியார்களின் கனவிலே தில்லைக் கூத்தன் தோன்றியருளியமை போன்ற தெய்வீகக் காரணங்களால் “ஈழத்துச் சிதம்பரம்” என்ற தனிச்சிறப்புக்கு இலக்காகியுள்ள காரைநகர்த்திண்ணபுரம் சௌந்தராம்பிகை உடனுறை சுந்தரேஸ்வரப்பெருமானின் திருக்கோவிலில் 24.12.2017 ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகும். திருவெம்பாவைத் திருவிழா மிகச் சிறப்பாகத் தொடர்ந்து நடைபெற உள்ளது. 01.01.2018 திங்கட்கிழமை பஞ்சரத பவனியும், 02.01.2018 செவ்வாய்க்கிழமை அதிகாலை வசந்த மண்டபத்திலே கூத்தப்பிரானுக்குரிய ஆர்த்ராபிஷேகமும் அன்று பிற்பகலில் நடராஜப்பெருமானின் வீதியுலாவும் தீர்த்தோற்சவம் முதலியனவும் நடைபெறவுள்ளன.



*வானவர் தானவர் வையகத் தோரெலாம்*
*வருமீழச் சிதம்ப ரத்தில்*
*ஆனந்தத் தாண்டவம் ஆடிடும் வேந்தருக்(கு)*
*ஆதிரை நன்னா ளிலே*
*தேனுடன் பால் தயிர் செவ்விளநீர், கனி*
*திருநீறு சாந்து பன்னீர்*
*வானிழி கங்கையாய்ச் சொரிந்திடும் காட்சியின்*
*மாண்பினை மாந்தி உய்வோம்.*



**– சிற்பி**

**வாசகர் கவனத்திற்கு :**

இந்து சாதனம் – Hindu Organ இருமொழி மாத பத்திரிகையின் மீள் வருகை கண்டு மகிழ்ந்து நீங்கள் எழுதிய கடிதங்கள் எமக்கு ஊக்கமும் மகிழ்வும் தருகின்றன. தொடர்ந்தும் தங்கள் கருத்துக்கள் ஆக்கங்களை எமக்கு அனுப்பி வையுங்கள். .

தாங்களும் தங்களுக்கு எமது இந்து தர்மம் – ஆன்மீக வாழ்வு தொடர்பான சந்தேகங்களை தங்கள் பெயர், முகவரியோடு எழுதி அனுப்பினால் தகுந்த அறிஞர்கள் மூலம் அதற்கான பதில்களை பெற்று பிரசுரிப்போம்.

நூற்றாண்டுப் பழமை மிக்க இப்பத்திரிகையின் தொடர் வரவு, தங்களின் கைகளிலும் கரிசனையிலுமே உள்ளது என்பதையும் ஞாபகமூட்ட விழைகிறோம். ஆண்டுச் சந்தாதாரராக இணையவும் வேண்டுகிறோம். இந்த இதழில் நடராஜருக்கு முதன்மை தரும் திருவாதிரைத் தலங்களாக ஐந்து ஈழத்து நடேச ஆலயங்கள் குறித்த குறிப்புகளை இணைத்துள்ளோம். இந்த ஐந்து ஆலயங்களும் கிழக்கு முதலிய நாற்றிசைகளையும் நோக்கியுள்ளமை தனித்துவமாக அவதானத்திற்குரியதாகும்.

**– ஆசிரியர்**
**இந்து சாதனம் – Hindu Organ**